**நிலச்சரிவு இடர் பாதுகாப்பு செயற்திட்டம் - 2014**

நிலச்சரிவு இடர் பாதுகாப்பு செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல்- பி 109 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் முன்னாள் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பல் துறை அமைச்சும் தற்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன மத்திய, ஊவா மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களில் உயர் நிலப் பகுதிகளில் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுலாக்குவதன் மூலம் அடிப்படை உட்கட்டமைப்பாக ஏ-வகுப்பு தேசிய வீதிகளிற்காக நிலச் சரிவு இடரை குறைப்பதற்கும் அதன் மூலம் வீதிப் பாவனையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் உள்ளடங்கலாக வீதி வலையமைப்பு பாதுகாப்பு மற்றும் மக்களின் வாழ்வாதரத்தை பாதுகாத்தல் என்பவற்றினை பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி என்பவற்றிற்கு பங்களித்து தரமுயர்தல் என்பனவே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது.

செயற்திட்டத்தின் நோக்கெல்லை கொண்டுள்ளதாவன,

(i) வீதி இடர் முகாமைத்துவ மாதிரி பகுதிக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள்

(ii) இடர் முகாமைத்துவம் மற்றும் ஏனைய தொடர்புபட்ட வசதிகள் என்பவற்றிற்காக தேசிய வீதிகளின் உயர் முன்னுரிமை பகுதிகளிற்கான பாதுகாப்பு நடவடிக்கைகன் .

(iii) முன் கூட்டியே எச்சரிக்கை முறைமை ஸ்தாபித்தல்

(iv) ஆலோசனை சேவைகளை வழங்கல்

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 14,754 மில்லியனிற்கு சமமான ஜ.யென் 9,841 மில்லியனானதுடன் அதில் ரூபா 11,423 மில்லியனிற்கு சமமான ஜப்பான யென் 7,619 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்ட அதன் நடவடிக்கைகள் 2013 மார்ச் 14 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டுள்ளது.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக்கூற்றுக்களை தயாரித்து

நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.4. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதியிடல் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிலச்சரிவு இடர் பாதுகாப்பு செயற்திட்டத்திற்கு வடக்கு நெடுஞ்சாலை செயற்திட்டத்திலிருந்து மாற்றப்பட்டிருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டங்களிற்கு வருகைதருவதற்காக கேள்விச் சபையின் உறுப்பினர்களிற்காக செலுத்தப்பட்ட ரூபா 157,500 தொகையான படிகள் உறுப்புரிமைக் கட்டணமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செய்றபாட்டு மீளாய்வு

### 3.1 நிதி பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிப் பயன்பாடு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 7,619.00 | 11,423.00 | 250.00 | 177.90 | 142.28 | 177.90 |
| இலங்கை அரசாங்கம் | 2,222.00 | 3,331.00 | 50.00 | 19.40 | - | 30.20 |
| மொத்தம் | 9,841.00 | 14,754.00 | 300.00 | 197.30 | 142.28 | 208.10 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புக்கு மேலதிகமாக, வர்த்தக வங்கியொன்றிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்ட ரூபா 09 மில்லியன் தொகையான கடன் பெறுகைகள் கடனளிக்கும் முகவரின் ஒத்துழைப்பு இல்லாமல் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், கடனை திருப்பிச் செலுத்துவதற்கு செயற்திட்டத்திற்கு இருந்த பொறுப்புகள் கணக்காய்வில் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயலாளரின் 2013 யூலை 03 ஆந் திகதிய எம்பிஎச்/எச்டபிள்யூவை/ஏசீசீ/03/03/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பிற்காக மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 50 மில்லியன் தொகையான ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 19.4 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டடிருந்தது, ரூபா 30.6 மில்லியன் மேலதிக மதிப்பீட்டால் வந்த விளைவாகும்.

### 3.2 பௌதீக செயலாற்றல்

பெறப்பட்ட தகவலின் பிரகாரம், உயர் முன்னுரிமை பிரிவுகளிற்காக மண் சரிவு பாதுகாப்பின் புலனாய்வுக் கட்டங்கள் 02 பிரதான வகுதிகளின் கீழ் 2014 திசெம்பர் 21 இல் உள்ளவாறு 95 சதவீதத்தால் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், முன்கூட்டிய எச்சரிக்கை முறைமையின் ஸ்தாபிப்பின் பௌதீக முன்னேற்றம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 65 சதவீதத்தில் இருந்தது.

### 3.3 நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டிருக்காத ஆலோசனையாளர் பதவிக்காக நபரொருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் வாகனப் படிகளாக ரூபா 780,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைதல் தொடர்பில் ஆலோசனையாளரின் பங்களிப்பை நிரூபிப்பதற்கு நாளாந்த வருகை, வேலை ஒதுக்கீடுகள் மற்றும் செய்யப்பட்ட வேலை அறிக்கைகள் போன்றவற்றிக்கான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை